அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு சித்திரை–வைகாசி மே 2018 முரசு 11 ஒலி 131

வடலூர்
சத்திய தருமசாலை
துவக்கநாள் விழா
அழைப்பிதழ்
உள்ளே...



**திருஅருட்பா**

திருநாள் நினைத்தொழும் நன்னாள்
தொழாமல் செலுத்தியநாள் கருநாள் என மறை எல்லாம்
புகலும் கருத்து அறிந்தே
**ஒருநாளினும் நின்றனை மறவார் அன்பர்**
ஒற்றியில்வாழ் மருநாண் மலர்க்குழல் மானே
வடிவுடை மாணிக்கமே.

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

# 152 ஆண்டு தருமசாலை துவக்க நாள் விழா மற்றும் 33ம் ஆண்டு திருஅருட்பா இசை விழா அழைப்பு




அன்பர்களே! சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெரிய வெளிச்சத்தைப் பெறுவதுபோல் சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டே பெருந்தயவாகிய கடவுள் அருளைப் பெறவேண்டும். இதுவொன்றே கடவுளது திருவருளைப் பெறுவதற்கு ஒரே வழி என்பது நம் வள்ளல் பெருமானின் அருள்வார்த்தை.

ஜீவர்களாகிய நாம் அனைவரும் இந்த ஜீவதயையை விருத்தி செய்து கடவுள் அருளைப் பெற்று நிறைவான இன்பதைப் பெறுவதற்காக நம் பெருமானார் பிரபவ வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் (23-05-1867) அன்று வடலூரில் **சத்திய தருமசாலையைத்** தொடங்கினார்கள். இதனை முன்னிட்டு வருகின்ற **மே மாதம் 25, 26, 27 வெள்ளி, சனி, ஞாயிறு** ஆகிய மூன்று நாட்களும் 152ம் ஆண்டு தருமசாலை துவக்க நாள் விழா மற்றும் 33ஆம் ஆண்டு திருஅருட்பா இசைவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்பர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**நாள்:**
25, 26, 27
வெள்ளி, சனி, ஞாயிறு

**இடம்:**
வள்ளலார் பெருவெளி அரங்கம்,
ஞானசபை ஆர்ச் சாலை, வடலூர்.

**உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே**
**உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச்சிவமே - அகவல்**

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா



*அன்பு உள்ளங்களே!*

*நாம் நடக்கும் காலத்திலும், நீராடும் காலத்திலும், சயன காலத்திலும் நமக்கு தெரியாமலேயே பலஜீவராசிகள் துன்பப்படவும் இறக்கவும் நேரிடுகின்றது. இதனால் நமக்கு பல பாவங்கள் ஏற்படுகின்றது. இவை நம் மனதிற்கு புலப்படாமலும் நேரிடும். இவ்வாறு நாம் அறியாமல் செய்யும் பாவங்கள் யாவும் தினம் செய்யும் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்து உபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும். ஆகவே நாம் வள்ளல் பெருமானார் அருளிய திருவருட்பா எனும் அருட்பாசுரங்களை நாளும் ஓதி பாவங்கள் நீங்கி இன்புறுவோமாக.*

**பிறவா நெறியது பேசா நிலையது பேசில் என்றும்**
**இறவா உருவதுள் ஏற்றால் வருவது இருள் அகன்றோர்**
**மறவா துடையது மாதோர் புடையது வாழ்த்துகின்றோர்**
**உறவாய் இருப்பது ஒன்றுஉண்டே முக்கண்ணொடு என் உள்ளகத்தே. 1**

**வகைஅறியேன் சிறியேன் சன்மார்க்க மேவும்**
**மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழும்**
**தகைஅறியேன் நலம்ஒன்றும் அறியேன் பொய்ம்மை**
**தான்அறிவேன் நல்லோரைச் சலஞ்செய் கின்ற**
**மிகைஅறிவேன் தீங்கென்ப எல்லாம் இங்கே**
**மிகஅறிவேன் எனினும்எனை விடுதி யாயில்**
**பகைஅறிவேன் நின்மீதில் பழிவைத்து இந்தப்**
**பாவிஉயிர் விடத்துணிவேன் பகர்ந்திட் டேனே. 2**

**அருள்தரல் வேண்டும் போற்றி என்அரசே**
**அடியனேன் மனத்தகத்து எழுந்த**
**இருள்கெடல் வேண்டும்போற்றி எந்தாயே**
**ஏழையேன் நின்றனைப் பாடும்**
**தெருள்உறல் வேண்டும் போற்றி என்அறிவே**
**சிந்தைநைந்து உலகிடை மயங்கும்**
**மருள்அறல் வேண்டும்போற்றி என்குருவே**
**மதிநதி வளர்சடை மணியே. 3**

திருச்சிற்றம்பலம்

# தருமசாலை விளம்பரம்

கல்வி கேள்விகளால் பகுத்தறியத்தக்க அறிவையுடைய உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அனைவருக்கும் வந்தனம் செய்து அறிவிக்கை.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க பிரயோஜனத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடையவேண்டும்.

அந்தப் பிரயோஜனம் யாதோவெனில்: எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லாச் சீவர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையும் தமது பரிபூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கம் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கையின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை அடைவதே இந்த மனிதப் பிறப்பினால் அடையத்தக்க பிரயோஜனம் என்று அறிய வேண்டும்.

இயற்கை இன்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால் அடையவேண்டுமெனில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடைய வேண்டும் என்றறிய வேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனால் பெறக்கூடுமெனில்: ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் கடவுளருளைப் பெறக் கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிதல்வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவது எதுவெனில்: எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்கு உண்டாகின்ற பசியென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்திசெய்வதே முக்கிய லக்ஷியம் என்று அறிய வேண்டும்.

ஆகலில் அந்த ஜீவகாருணிய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு கூடலூர் தாலூக்காவைச் சார்ந்த வடலூர் என்கின்ற பார்வதிபுரத்தில் சமரச வேத தருமச்சாலை என்றொரு தருமச்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது பலர் சகாயத்தாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயையுடைய புண்ணியர்கள் தங்கள்

தங்களால் கூடியவரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தைப் பாகம் செய்துகொள்ள வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

உலக முழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனுக்கும், உலக முழுதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரனுக்கும், மூன்று ஆசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரம்ம அனுபவத்தைப் பெற்ற ஜீவன் முத்தர்களுக்கும் பசி நேரிட்டபோது மனம் இளைத்தும் வலி குலைந்தும் அனுபவம் தடைப்பட்டும் வருந்துகின்றார்கள் என்றால், எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்ன பாடுபடார்கள்! பசி அதிகரித்த காலத்தில் முகம் சோர்ந்து போகின்றது, உச்சி வெதும்பு கின்றது, பிரமரந்திரம் அடைபடுகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்து போகின்றது, நாசி அழன்று கலைமாறி பெருமூச்சு விடுகின்றது, நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது, மெய்முழுவதும் கருகி சக்தியற்று ஸ்மரணை கெடுகின்றது, வாக்கு குழறித் தொனி மாறுகின்றது, கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றது, மலசல வழி வெதும்பி வேறுபடுகின்றது, உரோமம் வெறிக்கின்றது, பற்கள் கருகித்தளர்கின்றது, இரத்தமும் சலமும் சுவறுகின்றது, சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது, எலும்புகள் குழைந்து நோக்காடு உண்டாகின்றது, நாடி நரம்புகள் வலுவிழந்து மெலிந்து கட்டுவிடுகின்றது, வயிறு பகீரென்கின்றது, மனசு தளர்ந்து நினைவு மாறுகின்றது, புத்தி கெட்டு நிலை மாறுகின்றது, சித்தம் கலங்கித் திகைப்பேறுகின்றது, அகங்காரம் குலைந்து அச்சம் உண்டாகின்றது, பிரகிருதி சுருங்குகின்றது, கடவுள் விளக்கமும் ஆன்மவிளக்கமும் மறைபடுகின்றது, தாபசோபங்கள் மேன்மேல் உண்டாகின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஏக காலத்தில் உண்டாவது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே இருக்கின்றது. ஆகாரமுண்டு பசிநீங்கிய தருணத்தில் தத்துவங்கள் எல்லாம் தழைத்து கடவுள் விளக்கமும் ஆன்மவிளக்கமும் அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு, திருப்தியின்பம் உண்டாகின்றது. ஆகலில் நாமனைவரும் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டபோது மிகவும் கருணை உள்ளவர்களாகி நம்மால் கூடியமட்டில் அந்தப் பசி என்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்மலாபம் என்று அவசியம் அறிய வேண்டும்.

# சன்மார்க்கப் பெரும்பதி வருகை

சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலம் தொட்டு அளவிறந்த நெடுங்காலம் வரையில் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திரபேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய், சுத்தசன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத்தேவர்களும், எல்லா கடவுளரும், எல்லா தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னையடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையும் இல்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள் பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்.

*!!திருச்சிற்றம்பலம்!!*

# உண்மை விளக்கம்

நியூயார்க் நகரிலிருந்து ஒருவர் மும்பை அலுவலகக் கட்டிடத்திற்கு வந்திருந்தார். கட்டிட வளாகத்தின் வெளியே அனேக பிச்சைக்காரர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களைக் கண்டு மனம் இறங்கி உதவும் எண்ணத்தோடு அங்கிருந்த பிச்சைக்காரர்களில் ஒருவனுக்கு பணம் கொடுத்தார். அப்போது அந்த பிச்சைக்காரன் ஒரு கையை கொடுத்தவரிடம் நீட்டி மற்றொரு கையை பக்கவாட்டில் நீட்டினான்.

இதைக் கண்ட வெளிநாட்டவர் “இவ்வாறு ஏன் செய்கிறாய்?” என்று வினவ அவன் சிறிதும் தயக்கமின்றி “என்னுடைய இந்த தொழில் நன்றாக நடக்கிறது. எனவே இதற்கான கிளைப் பிரிவை ஆரம்பித்திருக்கிறேன்” என்றான். இதைக் கேட்டதும் வெறுத்துப் போனார் அந்த வெளிநாட்டவர்.

வேறு யாருக்காவது உதவலாம் என்று எண்ணி அலுவலக வாயிலருகே அமர்ந்திருந்தவனிடம் நெருங்கினார். அந்த வெளிநாட்டவர்க்கு அவனை எங்கோ பார்த்ததுபோன்ற உணர்வு. அவனிடம் சென்று “நீ இதற்கு முன் நியூயார்க் வந்திருக்கிறாயா?” என வினவினார்.

அதற்கு அவனோ “நான் நியூயார்க்கெல்லாம் வந்ததில்லை. அனேகமாக நீங்கள் என் பேஸ்புக் ஃப்ரண்டாக இருக்கலாம்” என்றான். இதைக் கேட்டு அதிர்ந்து போனார்.

இன்றைய சூழ்நிலையில் எல்லோரும் தொழில் நுட்ப ரீதியில் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். கூலி வேலை செய்பவனிடமும் செல்போன். அதில் whatsapp. ஆனால் இந்த வளர்ச்சி நம் அறியாமையை போக்கி இருக்கிறதா? குணத்தளவில் மாற்றம் செய்திருக்கிறதா? ஆன்ம வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறதா? வாழ்க்கை என்றால் என்ன என்று கற்றுத்தந்திருக்கிறதா? இந்த கேள்விக்கு பதில், ‘இல்லை’ என்பது மட்டுமே.

நாம் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டதாக நினைத்து நம்மை நாமே ஏமாற்றி கொண்டிருக்கிறோம் அல்லது ஏமாந்து கொண்டிருக்கிறோம்.

நம் வள்ளுவ பெருந்தகையும்

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல**

அறிவில்லாதவர் ஒரு நாளாகூட வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை. ஆனால் வீணாக பலகோடி எண்ணங்களை மட்டும் எண்ணுகின்றனர். இக்கருத்தையே நம் வள்ளல் பெருமானாரும்

**“உடம்பு வருவகை அறியீர் உயிர்வகையை அறியீர்**
**உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்**
**மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை**

**வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறை கற்றறியீர்**
**இடம்பெறு பொய் வாழ்க்கையிலே இன்பதுன்பம் அடுத்தே**
**எண்ணிஎண்ணி இளைக்கின்றீர் ஏழைஉலகீரே**
**நடம்புரிஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்**
**நண்ணியது நண்ணுமினோ புண்ணியம் சார்வீரே"**

என்று நாம் வாழும் முறையை கண்டு சாடுகின்றார்.

நமக்கு இந்த மனிதப் பிறவி மிகவும் சாதாரணமான ஒன்றாகக் காட்சியளிக்கிறது இல்லையா? மனிதப் பிறவி மிகவும் மேன்மையுடையது என்று கூறுவதற்கு என்ன இருக்கிறது? ஒரு ஆணும் பெண்ணும் இணைந்தால் கரு உருவாகிறது. இதில் என்ன மேன்மை இருக்கிறது? இதிலென்ன சிறப்பு இருக்கிறது? இதிலென்ன தனித்தன்மை இருக்கிறது? என்று நம்முடைய மனம் கேள்வி கேட்கும். ஆனால், உண்மையில் ஒரு உயிரானது மனிதப் பிறவி எடுப்பதற்கு முன் என்னென்ன பிறவிகளை கடந்து வந்தது என்பதையும் அந்தந்த பிறவிகளில் ஒவ்வொரு உயிரும் எப்படியெல்லாம் அவஸ்தைப்பட்டது என்பதையும் நம் வள்ளல் பெருமானார் விவரிக்கின்றார். அதனை தெரிந்து கொண்டால் நாம் இப்போது பெற்றுள்ள மனிதப் பிறவியின் மகத்துவம் புரியும்.

இனி வள்ளல்பெருமான் கூறியுள்ளதை காண்போம்.

அஞ்ஞான இருளில் ஒன்றும் தெரியாது உணர்ச்சியின்றிக் கிடந்த காலம்போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே இவ்வுலகினிடத்தே

| பிறந்த பிறவிகள் | பட்ட அவஸ்தைகள் |
|---|---|
| 1. தாவரயோனிவர்க்கம் | |
| புல், நெல், மரம், செடி, பூடு ------ | களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளூண்டல் |
| கல், மலை, குன்று ---------------- | உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் |
| 2. ஊர்வன, நீர் வாழ்வன யோனிவர்க்கம் | |
| எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி ---------------------- | தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல் |
| தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கலம் ------------------------- | பிடியுண்டல் |
| 3. பறவை யோனிவர்க்கம் | |
| ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு ---------------------- | அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் |
| 4. விலங்குயோனிவர்க்கம் | |
| அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, | பிடியுண்டல், அடியுண்டல், |

| | |
|---|---|
| ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி | குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் |
| **5. தேவயோனிவர்க்கம்** | |
| பைசாசர், பூதர், இராக்கதர், அசுரர், சுரர் | அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைபடுதல் |
| **6. நரகயோனிவர்க்கம்** | |
| காட்டகத்தார், கரவுசெய்வார், கொலைசெய்வார் | பயப்படல், சிறைப்படல், சிதைபடல் |

"அங்ஙனம், நாங்கள் அப்பிறவிகள்தோறும் அடைந்த அலுப்பும், அச்சமும், அவலமும், களைப்பும், துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயர் அறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தி அருளிய தேவரீரது பெருங்கருணைக்கு நாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றும் தெரிந்தோமில்லை" என்று இறைவனிடம் வள்ளல் பெருமானார் முறையிடுகிறார். இதிலிருந்து நாம் அனைவரும் நமக்குக் கிடைத்திருக்கின்ற மனிதப்பிறவியின் மேன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சரி இத்தனை பிறவிகள் கழித்து ஏன் இறைவன் நமக்கு இந்த மனிதப் பிறவியை கொடுக்க வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பினால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களைப் பெறுவதற்கே என்று ஆன்றோர்கள் பகருகின்றனர்.

அதாவது அற நெறியில் வாழ்ந்து வீடுபேற்றினை அடையவேண்டும் என்பதே மனிதப் பிறப்பின் நோக்கம். இங்கே வீடுபேறு என்பது இறைவனின் அருளை அடைதல் எனப் பொருள்படும். இதனைத்தான் ஔவை "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" எனத் தொடங்கி "தானமும் தவமும் தான் செய்வாராகில் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்று அருளியுள்ளார்கள்.

இதை மணிவாசகப் பெருந்தகையும் "புல்லாகிப் பூடாய்" என்ற வரிகளின் இறுதியில் "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" எனத் தெள்ளத் தெளிவாக அருளியுள்ளார்.

இதை ஒட்டியே நம் வள்ளல் பெருமானாரும் "நாம் பல பிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப் பிறப்பு எடுத்தது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கே. எவ்வித முயற்சி செய்தாவது அந்த அருளை அடைய வேண்டும்" என்று அருளியுள்ளார்கள்.

*இறையருளை நாம் ஏன் பெற வேண்டும்?*

***'அருளலாது அணுவும் அசைந்திடாது அதனால்***

***அருள்நலம் பரவுகென்று அறைந்த மெய்ச்சிவமே'*** *– அகவல் (978)* *என்கிறார் நம் பெருமானார். இதற்கு உதாரணம்:*

*நாம் ஒரு சிம்கார்டைப் பயன்படுத்துகிறோம். அந்த சிம்கார்டில் தற்போது நாம் பயன்படுத்துகின்ற சேவைகளில் திருப்தி இல்லாவிட்டாலோ அல்லது புதிதாக ஒரு சேவையை பெற விரும்பினாலோ அந்த சிம்கார்டு கம்பெனியின் உதவிகொண்டுதான் நாம் பயன்படுத்துகின்ற சிம்கார்டின் சேவையில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். நாமாக எந்த ஒரு சேவையையும் பெறவோ, மாற்றவோ இயலாது. ஏனெனில், அந்த சிம்கார்டானது ஒருகட்டுப்பாட்டிற்கும், ஒருவித ஆற்றலுக்கும் உட்பட்டு இயங்குகிறது. அதுபோல், நமது வாழ்க்கையில் ஒருமாற்றத்தை(முன்னேற்றத்தைக்) கொண்டுவர விரும்பினால் நாமாக அதனைச் செய்துவிட முடியாது. இப்பூமியில் நாம் நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவோ, உயர்த்தவோ இயலாது. அதற்கு அருளின் துணை வேண்டும். அருளின் துணையின்றி நம்மால் தனித்து எதுவும் செய்ய இயலாது.*

*நம் வாழ்க்கையில் நாம் சுகமாக வாழ்வதற்கு அருளின் துணை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதனை*

***'அருளுறின் எல்லாம் ஆகும் ஈதுஉண்மை***

***அருளுற முயல்கவென்று அருளிய சிவமே'*** *– அகவல் (980)* *என்று வள்ளல் பெருமானார் அகவலில் நமக்கு சுட்டிக் காட்டுகிறார்.*

*திருவள்ளுவர் இதனை*

***'நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்***

***தேரினும் அஃதே துணை'*** *– திருக்குறள் (242) என்கிறார்.*


*இவ்வாறு, நம்முடைய வாழ்க்கையில் எந்த ஒரு செயலையும் செய்து முடிக்க வேண்டுமானாலும் இந்த வாழ்க்கையை நமக்குக் கொடுத்த இறைவனுடைய அருள் தேவைப்படுகிறது. மற்ற பிறவிகளில் அருளைப் பெற இயலாது.* ***மனிதப் பிறவியில் மட்டும்தான் அருளைப்பெற முடியும்.*** *அருளைப் பெறுவதற்காகவே இந்த மனிதப் பிறவி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் இப்போது என்ன செய்துகொண்டு இருக்கிறோம் என்று பெரியோர்கள் கூறும் கதை ஒன்றினைப் பார்ப்போம்.*

*ஒரு ஊரில் விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தினமும் விடியற்காலையில் தோட்டத்திற்கு சென்று உழைக்க ஆரம்பித்தால் இரவு நேரம்தான் வீட்டிற்கு வருவார். இவ்வாறு பல வருடங்களாக கடினமாக உழைத்து வந்தார். கருணையே வடிவான இறைவன் விவசாயிமீது இரக்கப்பட்டு அவருக்கு காமதேனு என்ற தேவலோக பசுவை கொடுத்தார். 'இந்த காமதேனுவை பயன்படுத்தி நீ சுகமாக*


வாழலாம்' என்று கூறி அருளினார். காமதேனுவின் சிறப்பு என்னவென்றால் அதனிடம் எதைக் கேட்டாலும் அதை கொடுக்கும் ஆற்றல் வல்லது. செல்வம் கேட்டால் செல்வம் கிடைக்கும், உணவு கேட்டால் உணவு கிடைக்கும், அழகான உடைகள் கேட்டால் உடைகள் கிடைக்கும், அழகிய விலையுயர்ந்த நகைகள் கேட்டால் நகைகிடைக்கும் இப்படி எந்தவொரு பொருளையும் கொடுக்க வல்லது இந்த காமதேனு. ஆனால் அந்த விவசாயி புத்திசாலியாக பயன்படுத்துகிறோம் என்று நினைத்து தான்பெற்ற அறிவை கொண்டு அந்த காமதேனுவிடம் 'எனக்கு இரண்டு மாடுகள் வேண்டும்' என்று கேட்டு உழுவதற்கு பயன்படுத்தினான். இந்தக் கதையில் வருகின்ற அந்த விவசாயி தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி சிறப்பாகச் செய்கிறோம் என்று நினைத்து முட்டாள்தனமாக செய்ததைப் போன்றே நாம் அனைவரும் நம்முடைய சிற்றறிவை பயன்படுத்தி பெறுதற்கு அரிய இந்த மனிதப் பிறவியை வீணாக்குகின்றோம். கடவுள் கருணையால் கொடுத்த இந்தப் பிறவியை சரியாகப் பயன்படுத்தாமல் வீணாகப் பொழுதைக் கழிக்கின்றோம். இதனை நம் வள்ளல் பெருமானார் பேருபதேசத்தில் **'இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள்'** என்று எச்சரிக்கிறார். மேலும் **'உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்'** என்கிறார்.

ஆகவே மெய்யன்பர்களே! வாழ்க்கையில், நாட வேண்டிய இறைவனை நாடி, பெற வேண்டிய அருளை பெற்று, அடைய வேண்டிய இன்பத்தை அடைந்து உய்வோமாக!

**திருச்சிற்றம்பலம்**



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

# பொய் எனும் போர்வை

நம் அனைவருக்குள்ளும் கற்பனைத் திறன் இருக்கிறது என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு, பொய் சொல்லுவதுதான்! பொய் சொல்பவன், தன் கற்பனையைப் பயன்படுத்தத் துவங்குகிறான். சூழ்நிலைக்கு ஏற்ப அவன் மனம் கற்பனையான நிகழ்வை உருவாக்குகிறது. பொய்யின் வெற்றியே அதன் உடனடித் தன்மைதான். பொய்யின் விதைகளாக இருப்பவை, சொற்களே!

ஒத்திகை பார்த்துச் சொல்லப்படும் பொய்கள் பெரும்பாலும் பல் இளித்துவிடுகின்றன. மேஜிக் செய்பவன் வெறும் கையால் பூக்களை வரவழைப்பதைவிடவும், நினைத்த நேரத்தில் நினைத்த பொய்யைச் சொல்லி எதிராளியை நம்பவைப்பதுதான் பெரிய மேஜிக்!

உண்மை வெளியாவதற்குத்தான் பல வருட காலம் தேவைப்படுகிறது. பொய் எப்போதும் நம் நாக்கின் நுனியில் காத்திருக்கிறது. பல வேளைகளில் நாம் சொன்ன பொய்கள், வேறு உருவம்கொண்டு நம்மிடமே திரும்பி வந்து சேர்கின்றன. உலகிலே மக்கள் அதிகம் பயன்படுத்துவது, **பொய்**தான். அதில் மொழி, தேசம், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமில்லை. பொய் சொல்வதற்கு எந்த அளவும் இல்லை. வயதும் இல்லை.

சராசரியாக ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவு பொய் சொல்லியிருப்பான் என்று ஒருநாள் யோசித்துப் பாருங்கள். நினைக்கவே பயமாக இருக்கும். பொய் என்பது ஒரு ருசி. அது பால்ய வயதில் நமக்கு அறிமுகமாகிறது. பொய்யை மெய்யிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாத வயது என்பதால் பொய்யை அப்படியே நம்பிவிடுகிறோம். அது பொய் என்ற விவரம் தெரியத் துவங்கியதும், நாமும் ஆசை ஆசையாகப் பொய்களைச் சிருஷ்டிக்கத் துவங்குகிறோம்.

முதல் பொய்யை எப்போது சொன்னோம் என்று உங்களில் யாருக்காவது நினைவிருக்கிறதா? யார் உங்கள் பொய்யை நம்பிய முதல் நபர்? என்ன பொய் அது? எதற்காக இந்தக் கேள்வி என்றால் பொய்யின் சகலகோடி வகைகளையும் நாம் பிரயோகித்துப் பார்த்து, அற்ப வெற்றிகளும் பெரும்பான்மைத் தோல்விகளுமே அடைந்திருக்கிறோம். எப்படித் துவங்கியது நம் பொய் சொல்லும் பயிற்சி என்று பின்னோக்கிச் சென்று தெரிந்துகொள்ள முடியுமா? என்பதற்காகத்தான் இந்தக் கேள்வி.

நாம் வளர வளர, நம்மோடு பொய்களும் வளர்கின்றன. சிறு வயதில் சொன்ன பொய்கள், இன்று கேள்விக்கு உரியவையாக இருக்கின்றன. உடல் வளர்ச்சிகூட குறிப்பிட்ட வயதுடன் நின்றுவிடுகிறது. பொய் வளர்வது, நிற்பதே இல்லை.

*பொய்யை உண்டாக்கவும் பிரயோகிக்கவும் பயின்றவுடன், அதன் பெயரை மாற்றிக்கொள்கிறோம். சிலர், 'அதைத் திறமை என்கிறார்கள், சிலர் அதைச் சாதுர்யம் என்றும், சிலர் தொழில் தர்மம்' என்றும் சொல்கிறார்கள். அவரவர் விருப்பத்திற்கேற்ப பொய் புதிய பெயரும், புதிய பொலிவும் பெறுகின்றது.*

*பொய் சொல்வது சரியா? தவறா? இந்த விவாதம் காலங்காலமாக முடிவேயில்லாமல் தொடர்கிறது. இந்த ஆய்வு, விவாதம் நோக்கியதல்ல. மாறாக, எதற்காக ஒரு மனிதன் பொய் சொல்கிறான்? எப்படி ஒரு பொய் உண்டாக்கப்படுகிறது? பொய் ஏன் இவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது? பொய் சொல்லத் தயங்காத நாம், மற்றவர்களால் பொய் சொல்லி ஏமாற்றப்படும்போது மட்டும் ஏன் கோபப்படுகிறோம்? என்பதைப் பற்றியது.*

*எல்லாப் பொய்களும் ஓர் இடைவெளியை உருவாக்குகிறது. தற்காலிகமான சந்தோஷத்தையும் தப்பித்தலையும் ஏற்படுத்துகிறது. ஒருமுறை நண்பரின் வீட்டில், ஹாலில் இருந்த டெலிபோன் மணி அடித்தது. நண்பரின் மகள் போனை எடுத்தாள். மறுமுனையில் யாரோ நண்பரைக் கேட்டார்கள். போனை ஒரு கையால் பொத்தியபடியே, அந்தச் சிறுமி, 'அப்பா! நீ வீட்ல இருக்கியா, இல்லையா?' என்று கேட்டாள். நண்பர், 'நான் வீட்ல இல்லையே' என்றதும், அந்தச் சிறுமி, 'அப்பா வீட்ல இல்லை' என்று சொல்லிப் போனை வைத்துவிட்டு, சிரித்தபடியே அவரின் அருகில் சென்றாள். 'சமர்த்துக்குட்டி' என்று நண்பர் தன் மகளைத் தூக்கிக் கொஞ்சினார். குழந்தை தன் உதட்டில் ஒட்டியிருந்த பொய்யின் மீதத்தைத் துடைத்தபடியே சிரித்தது.*

*மீன் எப்படி தன் குஞ்சுகளுக்கு நீந்தக் கற்றுத்தருவது அவசியமில்லையோ, அப்படி குழந்தைகள் பொய் சொல்வதற்குப் பெற்றோர் கற்றுத்தர வேண்டிய அவசியம் இன்றி, தானே அறிந்துகொண்டுவிடுகிறார்கள். பொய் என்று ஒன்று கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால், வாழ்வு சுவாரஸ்யமற்றுப் போயிருக்குமோ?*

*பொய் எவ்வாறு நம் வாழ்வோடு கலந்திருக்கிறது என்பதை பார்ப்போமா!*

*நவீன நகரமாம் புது புலியூரில் இராமன் குடும்பம் வசித்து வந்தது. இராமன் அந்நகரில் புதிதாக விற்பனைக்கு வந்த ரோபோக்களை பார்க்க கடை வீதிக்கு சென்றார். அதில் ஒரு ரோபோ பொய் சொல்பவர்களை எளிதில் கண்டு பிடித்துவிடும். அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு தண்டனையும் வழங்கும். இவ்வதிசய ரோபோவைப் பார்த்ததும் இராமனுக்கு பிடித்து போய்விட்டது.*

*உடனே அதனை விலை கொடுத்து வாங்கி தன் வீட்டிற்கு எடுத்து வந்தார். அதை தன் மனைவிக்கு அறிமுகம் செய்தார்.*

இரவு தாமதமாக வீட்டிற்கு வந்த தன் மகனை “ஏன்டா இவ்வளவு நேரம் எங்கடா போயிருந்த?” என்றார். அதற்கு மகன், “நான் என் நண்பன் வீட்டிற்கு படிக்க சென்று வந்தேன்” என்றான். உடனே ரோபோ வேகமாக நகர்ந்து வந்து அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டது. இதை சற்றும் எதிர்பாராத மகன், கோபமாக தன் தந்தையை பார்த்தான். தந்தை, “இது புதிதாக நம் வீட்டிற்கு வந்துள்ளது. யார் பொய் சொன்னாலும் இது உடனே காட்டி கொடுத்துவிடும்” என்றார். “இப்போது சொல் நீ எங்கே சென்றாய்?”, “என் நண்பர்களுடன் சினிமாவிற்கு சென்றேன்.” என்றான். உடனே தந்தை, “நாங்கள் எல்லாம் படிக்கும் காலத்தில் இப்படி எல்லாம் ஊர் சுற்ற மாட்டோம் தெரியுமா” என்றார். இம்முறை ரோபோ வேகமாக தந்தையிடம் நகர்ந்து அவரை ஒரு அறைவிட்டது. மனைவி வேகமாக வெளியில் வந்து பார்த்தார், இம்முறை யார் அடிவாங்கியது என்று, மனைவியும் “உங்கள் இருவர் போல நான் இருந்ததே கிடையாது...” என்று சொல்லி முடிக்கும்முன் ரோபோ வேகமாக மனைவியிடம் நகர்ந்து அவளுக்கும் ஒரு அறைவிட்டது. மொத்த குடும்பமே தலை குனிந்தது.

இவ்வாறு, மெய், பொய் என்று பேதம் பிரிக்க முடியாதபடி, பொய் நம் வாழ்வில் கலந்து இருக்கிறது.

அற்பப் பொய்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வரலாறு என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பொய்கள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள் சொல்லும் பொய்கள், அரசாட்சியின் பெயரால் நடைமுறைப்படுத்தப்படும் பொய்கள் யாவும் எந்த எதிர்ப்பும் இன்றி அங்கீகரிக்கப்பட்டு விடுகின்றன.

இன்று, மூச்சுத் திணறுமளவிற்கு பொய்கள், பொது மேடைகளிலும், ஊடகங்களிலும் பொங்கி வழிகின்றன. பச்சோந்தியாவது தன்னை எதிரிகளிடமிருந்து மறைத்துக் கொள்வதற்குத்தான் நிறம் மாற்றிக்கொள்கிறது. நாமோ நம்மை அடையாளம் காட்டிக் கொள்வதற்குத்தான் அதிகம் பொய் சொல்கிறோம்.

கடவுள் மீதான பயம்தான் இதுநாள் வரை பொய்யைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. பொய் சொன்னால் ஏதாவது நடக்கும் என்று மூதாதையர்கள் பயந்தார்கள். ஆனால், பூட்டைத் திறக்கப் பயன்படும் கள்ளச் சாவிகளைப் போல பொய்களும் செலவாணி (எக்ஸ்சேஞ்ச்) செய்யக்கூடியவை என்று உணர்ந்த பிறகு, அந்தப் பயம் மெல்ல நம்மைவிட்டுப் போய்விட்டது.

சாதாரணமாக நாம் பொய் என்பதை வெறும் தவறு என்று மட்டுமே நினைத்து கொண்டிருக்கிறோம். ஆனால் பொய் என்பது உலகிலேயே மிகப் பெரிய பாவங்களான பஞ்சமகா பாவங்கள் ஐந்தினுள் ஒன்றாகும். இது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்.

பொய் என்பது கற்பனையாக பேசுவது, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயலை செய்யாததற்கு சொல்வது. இன்னும் சொல்லப்போனால் நம்மில் பலபேர் யாருக்கும் உண்மையில்லாமல் பொய்யாகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எந்த இடத்தில் நாம் பொய்க்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறோம் என்று நம்முடைய ஒவ்வொரு செயலையும் கவனித்தாலே புரிந்துவிடும்.

இவ்வாறு நம் வாழ்வில் பொய் பலவிதமாக பரிணமிக்கின்றது. ஆகையால் நாம் மேல்சொன்னபடி பொய்யாக வாழ்வது இயற்கைக்கும், கடவுள் நமக்கு அளித்திருக்கும் பொன்னான நேரத்திற்கும், செய்யும் துரோகமாகும். இதை நாம் நன்றாக உணர வேண்டும்.

நாம் பொய்யை தவிர்க்க வேண்டுமானால் முதலில் அதற்கான சந்தர்ப்பத்திலிருந்து தப்பிக்க வேண்டும். இதுவே வழி.

திருச்சிற்றம்பலம்

## மூத்தோர்சொல் அமிர்தம்

ஒரு குருவை பக்தர் ஒருவர் தனது இல்லத்திற்கு விருந்தாளியாக அழைத்திருந்தார். பக்தரின் நண்பர்கள் சிலரும் வந்திருந்தனர். குருவானவர் சத்சங்கம் செய்யத் தொடங்கினார். சிறிது நேரம் கழித்து திடீரெனப் பூகம்பம் வெடித்தது. அவர்கள் உட்கார்ந்திருந்த கட்டிடம் ஏழு அடுக்கு மாடி. அவர்கள் ஏழாம் மாடியில் இருந்தார்கள். எனவே ஆபத்தான நிலையில்தான் இருந்தார்கள்.

எல்லோரும் தப்பிக்க முயன்றார்கள். வீட்டுகாரரர் ஓடுவதற்குமுன் குரு என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று பார்த்தார். முகத்தில் எந்தக் கவலையின் சுவடும் இல்லாமல் அவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். கண்களை மூடியவாறு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். பூகம்பத்துக்கு முன் எப்படியோ அப்படியேதான்.

இதைப் பார்த்ததும் வீட்டுகாரருக்கு ‘நான் எவ்வளவு கோழையாக இருந்துவிட்டேன்’ என்ற வருத்தம் வந்தது. வீட்டுக்கு வந்த விருந்தாளி உட்கார்ந்திருக்க வீட்டுகாரரர் ஓடி விடுவது அவ்வளவு சரியானதாக அவருக்குப் படவில்லை. மற்ற இருபது நண்பர்கள் மாடிப் படிகளில் இறங்கி ஓடிவிட்டார்கள். வீட்டுக்காரருக்குச் சரியான பயம் என்றாலும் ஓடாமல் நின்றுவிட்டார். நடுங்கிக்கொண்டே குருவுக்கு அருகில் உட்கார்ந்துவிட்டார்.

பூகம்பம் வந்தது போலவே போயும் விட்டது. பூகம்பம் வந்ததால் நின்றுபோன உரையாடலை மீண்டும் தொடர்ந்தார் குரு. எந்த வாக்கியத்தில் நிறுத்தினாரோ அதே வாக்கியத்தில் தொடங்கினார். அவரைப் பொருத்தவரை பூகம்பம் என்ற ஒன்று நடக்கவே இல்லை.

வீட்டுக்காரரர் எதையும் கவனிக்கும் அல்லது புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. அவருக்கு உடல் நடுங்கியது. பயம்பிடித்து ஆட்டியது. பூகம்பம் போய்விட்டதென்றாலும் பயம் போனபாடில்லை.

“ஒன்றும் சொல்லாதீர்கள். நீங்கள் சொல்வதைக் கேட்கும் நிலையில் நான் இல்லை. நான் நானாகவே இல்லை. இந்தப் பூகம்பம் என்னை வெகுவாகத்தான் ஆடிப்போக வைத்துவிட்டது. என்றாலும் உங்களை ஒன்று கேட்டுத்தான் ஆக வேண்டும். மற்ற எல்லா விருந்தாளிகளும் தப்பித்துப் போய்விட்டார்கள். நானும்கூட ஏறக்குறைய மாடிப்படிகளுக்குப் போய்விட்டேன். திடீரென உங்கள் நினைவு வந்ததால் திரும்பிப் பார்த்தேன்.

கண்களை மூடி உட்கார்ந்து விட்டீர்கள். துளிகூடக் கவலைப்படாமல்... எனக்கே என் கோழைத்தனத்தைக் கண்டு வெட்கமாகப் போய்விட்டது. நான் வீட்டுக்காரன். நான் ஓடக்கூடாது. எனவே திரும்பி வந்துவிட்டேன். உங்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். உங்களை ஒன்று கேட்டுதான் ஆகவேண்டும். நாங்கள் எல்லோரும் தப்பிக்க முயற்சி செய்தோம். உங்களுக்கு என்ன ஆயிற்று? இந்தப் பூகம்பத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?”

அப்போது குரு, “நானும்தான் தப்பித்துக் கொண்டேன். ஆனால் நீங்கள் புறத்தே தப்பித்தீர்கள். நானோ அகத்தளவில் தப்பித்தேன். உங்களுடைய முயற்சி வீண். ஏனென்றால் நீங்கள் எங்கே போனாலும் அங்கேயும் பூகம்பம் இருக்கத்தான் போகிறது. உங்களுடைய முயற்சிக்கு எந்தப்பொருளும் இல்லை. ஆறாவது இல்லையானால் ஐந்தாவது, அதுவும் இல்லையானால் நான்காவது மாடிக்குப் போய்ச் சேர்ந்திருப்பீர்கள். ஆனால் அங்கேயும்தான் பூகம்பம் இருக்கிறதே. நான் எனக்குள் இருந்த ஓரிடத்துக்குத் தப்பித்துப் போனேன். அங்கே எந்தப் பூகம்பமும் வந்துசேர முடியாது. நான் என்னுடைய மையத்திற்குப் போய்விட்டேன்” என்றார்.

**நல்ல மருந்திம் மருந்து – சுகம்**
**நல்கும் வைத்திய நாத மருந்து**
**சஞ்சலம் தீர்க்கும் மருந்து – எங்கும்**
**தானேதா னாகித் தழைக்கும் மருந்து**
**அஞ்சலென் றாளும் மருந்து – சச்சி**
**தானந்த மாக அமர்ந்த மருந்து – திருஅருட்பா**

ஓர் அரசனுடைய பொன்மாளிகையின் மீது கொடி பறக்கின்றது; வாயிலில் முரசு முழுங்குகின்றது; கொற்ற வெண்கொடை சுழற்றுகின்றார்கள்; செல்வங்கள் யாவும் நிரம்பியிருக்கின்றன; அவனுடைய ஆணை எட்டுத் திசைகளிலும் செல்லுகின்றது; செவியினால் எதையும் பார்க்கின்றான்; கண்ணினால் பேசுகின்றான்; ஆயிரக்கணக்கில் ஏவலர்கள்; ஆடை அணிகலன்களுக்கு அளவேயில்லை.

ஆயினும், இந்தப் பேரரசனுக்கு இன்பம் இல்லை! என்ன காரணம்?

இந்தப் பெரிய அரசன் தன்னிலும் மிகுந்த பெருமையும், செல்வமும் படைத்த மற்றோர் அரசனைப் பற்றிக் கேட்டறிந்தான். உள்ளத்தில் பெருங் கொந்தளிப்பு; அவனையே நினைத்து நினைத்துப் புழுங்குகின்றான். ஆகவே, மேலும் மேலும் மிகுந்த பெருஞ்செல்வம் தேட முயல்கின்றான். சிறிதும் நிம்மதியில்லை. உணவு உள்ளே செல்ல மறுக்கின்றது. இமை பொருந்த மறுக்கின்றது. மனிதனுக்கு இன்றியமையாதவை உணவும், உறக்கமும். இந்த இரண்டும் அந்த அரசனுக்கு இல்லாதொழிந்தன. அழகான தன் இளம் மனைவி வந்து, “என்ன வாட்டம்?” என்று வினவ அவள் மீது சீறி விழுகின்றான்.

கொல்லன் உலையிலுள்ள தோல் துருத்தியின் வெப்பமான காற்றுபோல் பெருமூச்செறிகின்றான்.

இது ஓர் நிகழ்ச்சி.

மற்றோர் இடத்தில் ஒரு வறியவன் விறகு வெட்டித் தலையில் சுமந்து ஊர் ஊராகத் திரிந்து விற்றான். சிறு பணம் கிடைத்தது. அதனைக் கொணர்ந்து மனைவி கையில் தந்தான். அவள் அரிசிக் கஞ்சி வைத்தாள். கீரையை வதக்கி தாளிதம் புரிந்து சமைத்தாள். அவன் மனைவி படைக்க மக்களுடன் இருந்து மிக்க மகிழ்ச்சியோடு உண்டான். தன் மனைவியையும் உண்ணச் செய்தான். இருவரும் அமர்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டார்கள்.

**'போனகம் என்பது தானுழந்து உண்டல்'** ஆதலால், உழைத்து உண்பதுவே சிறப்புடையது. அடுத்த வீட்டில் முயற்சியும் உழைப்பும் இன்றிச் சோம்பலின் வடிவாக இருக்கும் ஒருவனைக் கண்டு நகை செய்கிறான். நமக்கு நிகர் இல்லை என்று எண்ணி உவக்கிறான். அவன் மனத்தில் அமைதியும், ஆறுதலும், மகிழ்ச்சியும் நிரம்பி இருந்தது.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், முன்னே ஓர் அரசன் பற்பல செல்வங்கள் சூழ இருந்தும் கவலை கொண்டான். ஆனால் விறகு வெட்டியோ வறுமையிலிருந்தும் மகிழ்ச்சியுறுகின்றான். எனவே **இன்பம் செல்வத்திலும் இல்லை; கவலை வறுமையிலும் இல்லை.** துன்பம் அவாவினாலும், இன்பம் சிந்தையின் செம்மையினாலும் விளைகின்றன.

**"..................................... அதனால்,**
**செல்வம் என்பது சிந்தையின் நிறைவே**
**அல்கா நல்குரவு அவாவெனப் படுமே"**

என்ற அழகிய பாடல் மூலம் இந்த அழகிய கருத்தை நமக்குக் குமரகுருபரர் உணர்த்துகின்றார்.

திருச்சிற்றம்பலம்

ஒரு முறை அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் வீதியில் போய்க் கொண்டிருக்கும் போது சாக்கடையில் ஒரு பன்றிக் குட்டி சிக்கிக் கொண்டு துடிப்பதைக் கண்டார். அவர் மனமிளகி, குதிரை வண்டியிலிருந்து இறங்கிச் சென்று தாமே அக் குட்டியை வெளியே எடுத்துவிட்டார். அவர் ஆடையெல்லாம் அழுக்காகி விட்டது. அவசரத்தை முன்னிட்டு, கை கால்களை கழுவிக் கொண்டு அவர் பேச வேண்டிய கூட்டத்தில் கலந்து கொண்டார். விபரமறிந்து அங்கிருந்த நண்பர்கள் அவர் பன்றிக் குட்டி துடிப்பதைப் பார்த்துவிட்டு உதவி செய்தார் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவரோ, "இல்லையில்லை, அதைப் பார்த்து என் மனம் துடித்தது. அதனால்தான் நான் அந்தக் காரியத்தைச் செய்தேன். எனக்கு மகிழ்ச்சி கிடைத்தது" என்றார். பிறருடைய துயரத்தைக் கண்டதும் மனமிளகி அத்துயர் துடைக்கும்போதுதான் நாம் உண்மையான இன்பத்தை அடைகிறோம்.

**"நீ பிறருக்கு செய்யும் ஒவ்வொன்றும் உனக்கு நீயே செய்து கொள்கிறாய்" – பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி**

திருச்சிற்றம்பலம்

**Advertisement**


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Wings of Wisdom

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

- தவத்திரு ஊரன் அடிகளார், வடலூர்

**பாணிப் பிலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி 93**
**ஆணிப்பொன் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி 94**

*பொன், வெள்ளி முதலான உயர்ந்த உலோகங்களின் தரத்தை (மாற்று) அறிவதற்கு அவற்றைக் கல்லில் உரைத்துப் பார்ப்பர். அக்கல்லுக்கு உரைகல் என்று பெயர் (Touchstone). மாற்றுயர்ந்த பொன்னால் மாதிரியாக ஓர் ஆணி கெட்டியாய்ச் செய்து வைத்திருப்பர். அதற்கு உரையாணி என்று பெயர் (எழுத்தாணி, அச்சாணி என்பது போல). உரையாணியை உரைகல்லில் உரைத்து மாற்றுப்பார்ப்பர். உரையாணி செய்யப்பெறும் உயர்தரப்பொன் "ஆணிப்பொன்" என்று பெயர் பெற்று விட்டது. உரையாணியை (ஆணிப்பொன்னை) உரைத்தல் என்ன மாற்றுக் காட்டுகிறதோ, அந்த மாற்றை ஏனைய பொன்னும் காட்ட வேண்டும். மாதிரி ஆணிப்பொன்னின் தரத்தில், மாற்றில், உள்ள உயர்மாற்றுப்பொன் ஆணிப்பொன் எனப் பெயர் பெற்றது. இவ்வாறே முத்திலும் ஆணிமுத்து என்னும் வழக்குண்டு.*

*இறைவன் எழுந்தருளியுள்ள பொன்னம்பலம் மாற்றுயர்ந்த ஆணிப்பொன்னால் ஆனது. "ஆணிப்பொன்னம்பலத்தே கண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி" என்ற வள்ளற் பெருமானின் திருவருட்பாப் பாடல் புகழ்பெற்றது. அன்பர்களிடையே பெருவழக்கானது(4914).*

| | | |
|---|---|---|
| *பாணிப்பு* | - | *தாமதம் இல்லாமல்* |
| *பரவினோர்க்கு அருள்புரி* | - | *தன்னை வழிபடுவோர்க்கு அருள்புரிகின்ற* |
| *ஆணிப்பொன்னம்பலத்து* | - | *ஆணிப்பொன்னம் பலத்திலே எழுந்தருளியுள்ள (இங்கே ஆணிப்பொன்னம்பலம் என்பது சத்தியஞான சபை)* |
| *அருட்பெருஞ்ஜோதி* | - | *அருட்பெருஞ்ஜோதியே!* |

*ஆணிப்பொன்னம்பலத்து அருட்பெருஞ்ஜோதி, வழிபடுவோர்க்குத் தாமதமின்றி (பாணிப்பு இன்றி) அருள்புரிகிறது. விரைந்து அருள்புரிகிறது. அருள்புரிவதில் அருட்பெருஞ்ஜோதிக்கு உள்ள விரைவு வழிபடுவதில் நமக்கும் இருக்க வேண்டும்.*

**நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர் 103**
**ஆடகப் பொதுஒளிர் அருட்பெருஞ்ஜோதி 104**

*நாடகம் – நடனம்*

*இயல், இசை, நாடகம் எனத் தமிழை முத்தமிழாகப் பிரித்தனர் பழந்தமிழ்ப் புலவர்கள். இயற்றமிழ். இசைத்தமிழ், நாடகத்தமிழ். இயல் - உரை, இசை - பாட்டு, நாடகம் - ஆட்டம். பாட்டுப்பாடுதல் இசை, ஆட்டமாடுதல் நாடகம். ஆடற்கலையே அந்நாளில் நாடகம் எனப்பட்டது. பின்னாளில் நடிப்புக்கலை நாடகம் எனப் பெயர் பெற்றது.* Dance,Drama *என்ற ஆங்கிலப் பெயர்களால் இதனை நன்கறியலாம்.* Dance *"டான்ஸ்" - நடனம், நாட்டியம், கூத்து.* Drama *"டிராமா" - நாடகம். நடனத்திற்கு ராஜன் நடராஜன். கூத்தப்பெருமான் என்பதும் அவன் பெயர். நடராஜப்பெருமான் ஆடுவது நடனம், நாடகம், கூத்து.*

*முன் அடியில் "ஆடுதல் வல்ல அருட்பெருஞ்ஜோதி" என்றார். இங்கே "நாடகத் திருச்செயல் நவிற்றிடும்" என்கிறார். நாடகத் திருச்செயல், திருநடனம். இறைவனின் நடனம் ஆனந்தநடனம். அதனை "ஆனந்தநாடகம்" என்பார் நம் வள்ளற் பெருமான்.*

***ஐயர் திருச்சபை ஆடகமே***
***ஆடுதல் ஆனந்த நாடகமே 5080***

***ஆனந்த நாடகம் கண்டோமே – பர***
***மானந்த போனகம் கொண்டோமே 5084***

*என்பன பெருமான்வாக்கு. ஆடகமும் நாடகமும் இங்கும் வந்தன.*

*ஆடகப்பொது – பொற்சபை; பொன்னம்பலம்*

*ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என நான்கு வகை பொன் உண்டு.*

*" **சாதரூபங் கிளிச்சிறை யாடகம்***
***சாம்பூ நத**மென வோங்கிய கொள்ளையிற்*
*பொலந்தெரி மாக்கள் கலக்கரு ரொழித்தாங்*
*கிலங்கு கொடி யெடுக்கு நலங்கிளர் வீதியும்"*

*என்பது சிலப்பதிகாரம், 14 ஊர்காண்காதை, பொன்வணிகர் வீதியின் வருணனை. நால்வகைப் பொன்னிலும் ஆடகம் (ஆடகப்பொன்) தரம் உயர்ந்தது, மாற்றுயர்ந்தது.*

சிதம்பரப் பொற்சபை ஆடகப் பொன்னால் ஆனது. "ஆடனக் பொற்சபை நடுவே நாடகம் செய்தருளும் அம்மே! என் அப்பா! என் ஐயா! என் அரசே!" என்பது பெருமான் வாக்கு (4642). இவ்விடத்தும் ஆடகமும் நாடகமும் வந்தன.

திருவனந்தபுரம் கோயிலுக்கு "ஆடக மாடம்" என்று பெயர். "ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன்", "ஆடகமாடத்து அரவணைக் கிடந்தோன்" என்பன சிலப்பதிகாரம் (26 கால்கோட்காதை 62; 30 வரந்தருகாதை 51).

நாடகத் திருச்செயல் நவிற்றிடும் - நடனமாடும் திருச்செயலைப்புரியும்; ஒருபேர் ஆடகப்பொது - ஒப்பற்ற சிறந்த ஆடகப்பொன்னால் ஆன சபையில்; ஒளிர்அருட்பெருஞ்ஜோதி - ஒளிருகின்ற (ஒளிவீசுகின்ற) அருட்பெருஞ்ஜோதி!

ஆடகப்பொதுவில் (தில்லைப் பொன்னம்பலத்தில், வடலூர் சத்தியஞானசபையில்) நாடகச்திருச்செயல் நவிற்றிடும் ஆனந்தநடனம் ஆடியருளும், ஆடியருளி ஒளிரும், அருட்பெருஞ்ஜோதியே! என்றவாறு.

திருச்சிற்றம்பலம்


# திருமந்திரத் தேன்



**தன்னை அறியாது தான் அல என்னாது இங்கு**
**இன்மை அறியாது இளையர் என்று ஓராது**
**வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்**
**தன்மையின் நல்ல தவம் செய்யும் நீரே. - திருமந்திரம்**

கால முடிவில் தவறாமல் கூற்றுவன் வருவான். அவனை யாரும் அறிந்து கொள்ளுதல் முடியாது. அவன் நல்லவர், பொல்லாதவர் எனப் பார்க்கமாட்டான்; மேலும் அக்குடும்பம் வறுமையில் வாடும் குடும்பமாயிற்றே எனவும் நினைக்க மாட்டான். இளைய வயதினர் எனவும் பார்க்கமாட்டான். இத்தகைய தன்மை கொண்ட எமன் எவரும் மாற்ற முடியாதபடி மிக்க வன்மையுடன் வருவான். அக்கூற்றுவன் வருமுன் நீங்கள் ஒழுக்கம் முதலியவற்றில் பயிலும் தன்மை பெற்று அதனால் நல்தவம் செய்யுங்கள்.

திருச்சிற்றம்பலம்




“ஆணவம் என்பது கண்ணில் விழுந்த தூசி போன்றது. அதை நீக்காமல் நம்மால் எதையும் தெளிவாகக் காண முடியாது.”

- புத்தர்

நம் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் இடையூறு செய்யும் எதிரிகள் எங்கே உள்ளனர்? என வெளியே தேடுகிறோம்.

மாறாக நம் எதிரிகள் நம் உள்ளேயே மறைந்துள்ளனர் என்பதை நாம் அறிவதில்லை. அவர்களைத்தான் நாம் தேடிக் கண்டறியவேண்டும்.

வெளியே உள்ள எதிரிகள் உடனடியாக இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் தங்களைத் தாங்களே அடையாளம் காட்டிக் கொள்ளத் தவறமாட்டார்கள்.

ஆனால் நம்முள் உள்ள எதிரிகள் தன்னைக் காட்டாமலேயே நம்மை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

நம்முள்ளே உள்ள ஓர் எதிரி பட்டாளத்தின் முன் வரிசையில் உள்ள ஒரு முழு எதிரியின் பெயர்தான் திருவாளர் “சுயநலம்”.

மனிதர்களாக உள்ள நமக்கு சுய பாதுகாப்பு முக்கியம் என்றாலும் இது சுயநலமாக மாறி, நம்மை வீழ்த்தி வேதனைக்கு உள்ளாக்கி விடுகிறது.

கட்டுக்குள் இருக்கும்போது அதனால் எந்தக் கேடுமில்லை. ஆனால் அது எல்லைதாண்டி ஏகாதிகாரத்தின் உச்சத்திற்கு செல்லும்போது எத்தனையோ சொல்ல முடியாத கேடுகளைச் செய்துவிடுகிறது.

ஒரு குழுவில் விளையாடும் ஒரு தனி விளையாட்டு வீரரோ வீராங்கனையோ ஊக்க மருந்தினை உட்கொண்டு(சுய நலத்தின் உச்சம் அது) அக்குழுவின் வெற்றியையே கேள்விக்குறியாக்கி கேலிக்குரியதாக்கி விடுவதில்லையா?

தன்னைத் தாழ்த்திக் கொள்வோன் உயர்த்தப்படுவான்; பிறர்முன் தன்னை மட்டும் உயர்த்திக்கொள்ள நினைப்பவன் பிறரால் மட்டமாக மதிக்கப்படுவான் என்பது அனுபவ முதுமொழி அல்லவா?

சுயநலம் நம்மை அளவிற்கு அதிகமாக தாக்காமல் இருக்கவே நம் வள்ளல் பெருமானார் பிறர்நலம் பேணுதல், பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் என்ற உயரிய நெறியை அருளியுள்ளார்கள்.

மேலும் செல்வம், வசதிவாய்ப்புகள், பதவி, கௌரவம் முதலிய பல்வேறு வெளிப்புறச் சேர்க்கைகள் இருப்பதால் நாம் கர்வப்படுகிறோம். ஆனால் இச்சேர்க்கைகள் நொடியில் அழிந்துபோகக் கூடியவை என்பதை மறந்துவிடுகிறோம்.

ஆக இச்சேர்க்கைகளே நிலையற்றவை எனும்போது கர்வம் மட்டும் எத்தனை நாட்களுக்கு இருக்கும்?

இவ்வாறான சேர்க்கைகளால் கர்வமுடையவராக இருப்பதற்கு பதிலாக அவை கணப்பொழுதே இருக்கக் கூடியவை என அறிந்து தெளிந்து ஆத்மாவின் நிலைத்த வடிவத்தை தியானம் செய்ய வேண்டும்.

ஒரு தடவை காகிதம் ஒன்று கர்வம் கொண்டது. காற்றின் உதவியால் மலையின் உச்சியைச் சென்றடைந்து விட்ட அந்த அழுக்கான காகிதத் துண்டு சிறிதும் பண்பாடின்றி, அச் சிகரத்திடம், "பார்த்தாயா! எனது வலிமையை, நான் இவ்வளவு உயரத்தைத் தொட்டு விட்டேன்" என்றது.

"இதை அடைந்தமைக்கு உனது வலிமையே காரணம் என்ற தவறான எண்ணத்தை மனதிலிருந்து அகற்றி விடு" என்றது மலைச் சிகரம்.

"எனது வலிமையில்லையென்றால் பிறகு யாருடைய வலிமை இது?" எனக் கேட்டது காகிதத் துண்டு.

"உன்னை இந்த உயரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்ததற்கான முழுப் பெருமையும் காற்றையே சாரும். காற்று அடிக்காதபொழுது, நீ எவ்வளவு அற்பமானவன் என்பதை நான் நன்கறிவேன்" என்றது சிகரம்.

"இந்தக் காற்று எங்கிருந்து வந்தது?" என வினவினது துண்டுக் காகிதம்.

"அப்படியானால் நீ உனது வலிமையினால் மட்டுமே இந்த உயரத்தை வந்தடைந்துள்ளாய் என்றால் இனிமேல் நீ இங்கேயே இருந்து விடு. கீழே போகவே போகாதே" என்றது சிகரம்.

சிகரம் துண்டுக் காகிதத்திற்கு இந்த ஆலோசனையைக் கூறிக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு பலத்த காற்று அடித்தது. காகிதத் துண்டு சிகரத்திற்கு எந்த பதிலும் அளிப்பதற்கு முன்னரே, அது சிகரத்திலிருந்து பறந்து போய் சில நொடிகளிலேயே நிலத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒரு சாக்கடையில் வந்து விழுந்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது இன்னும் சிறு சிறு துண்டுகளாகிப் போனது.

*இப்படித்தான் புறச் சேர்க்கைகள் மற்றும் சொத்துகளால் கர்வம் கொள்ளும் மனிதர்கள் நிலையும் இதற்குச் சமமானது தான். ஒருவர் புண்ணிய கர்ம வினைகளின் உதவியைப் பெற்றுச் செல்வந்தராகவும் கௌரவம் உடையவராகவும் ஆவதில் வெற்றி அடைந்து விடுகிறார். இதில் வியப்புக்குரியது எதுவுமே இல்லை. ஏனென்றால், எப்போது அவரது பாவ கர்ம வினைகள் செயல்படத் தொடங்குகிறதோ அப்போதே பாதகமான பலன்கள் தோன்றுகின்றன. இதனால் அவர் திடீரென்று ஏழ்மை என்ற படுகுழியில் தள்ளப்பட்டு விடுகிறார். எனவே நாம் எப்போதும் "நான்" என்கிற கர்வம் கொள்ளல் ஆகாது. இதை நம் வள்ளல் பெருமானார் தமது திருஅருட்பாவில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.*

**உடுப்பவனும் உண்பவனும் நானே**
**என்னவும் நாணம் உறுவ தெந்தாய்**
**தடுப்பவனும் தடைதீர்த்துக் கொடுப்பவனும்**
**பிறப்பிறப்புத் தன்னை நீக்கி**
**எடுப்பவனும் காப்பவனும் இன்பஅனுபவ**
**உருவாய் என்னுள் ஓங்கி**
**அடுப்பவனும் நீஎன்றால் அந்தோ**
**இச்சிறியேனால் ஆவ தென்னே. - திருஅருட்பா 163**

*1930களில் அமெரிக்க அறிஞர் டேல்கார்னிஜி என்பவர் பலவகை முன்னேற்றங்கள் குறித்து பல புத்தகங்களை எழுதியபோது ஒரு புத்தகத்தில் ஒருதகவலைக் கோடிட்டுக் காட்டுகிறார்.*

*நியூயார்க் தொலைபேசி கம்பெனி ஒன்றிலிருந்து தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்து ஆய்வு செய்தார். அதில் அதிகமாக பயன்படுத்தப்பட்ட சொல் "நான்" என்ற சொல்தான்.*

*500 தொலைபேசி உரையாடல்களில் 3,900 முறை "நான்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கண்டறிந்தார். நமது சுயநலத்தின் காரணமாக எழுந்த கர்வத்தின் வெளிப்பாடுதான் இது.*

*இதுதான் நம் இன்ப துன்ப அனுபவத்திற்கு ஆதாரமாய் இருக்கிறது. இதை நம் வள்ளல் பெருந்தகை உரைநடைப் பகுதியில் "தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக் கொள்ள உபகரித்தருளிய உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான் எனது என்று கொண்டதோர் சுதந்தரமானது துன்ப இன்ப விளைவிற்கு ஆதாதரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றியிருந்தது" என்கிறார்.*

நம் பெருமானின் அருள் மொழியிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது என்னவெனில், ‘யான் எனது’ என்பதே நம் வாழ்வில் நாம் அனுபவிக்கும் எல்லாத் துன்பத்திற்கும் காரணம்.

இந்த தற்போதத்தை நீக்கி வாழ்ந்தால் எப்போதுமே இன்பமாக வாழலாம்.

இதற்கு நம் வள்ளல் பெருமானார் அருளிய சத்விசாரத்தில் ஈடுபடவேண்டும்.

காகித ஓடத்தில் அமர்ந்து கொண்டு தற்செருக்குக் கொள்ளாதே; உனது ஓடம் எப்பொழுது நீரில் மூழ்கிப் போய்விடும் என்பது தெரியாது என நம் மனத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

நான்கு நாட்களுக்கு இனிய இன்பமளிக்கும் நிலவொளிக்குப் பிறகு இருள் சூழத் தொடங்குகிறது. எனவே நமக்கு கிடைத்துள்ளவைகள் எல்லாம் எப்பொழுதும் நம்மிடமே நிலைத்து இருக்கும் என்பது நிச்சயமானதல்ல என்பதை நம் மனதிற்குள் ஆழமாகப் பதியவையுங்கள்.

வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் வந்தால் அவற்றை நிகழ்வாக ஏற்றுக்கொள்ள மனதை பழக்குங்கள். அவ்விரு நிலைகளுக்கும் இடையே உள்ள சமநிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள். சாதகமும் பாதகமும் நமது கைகளில் கிடையாது. ஆனால், தொடர்ந்து மகிழ்ச்சியுடன் இருப்பது நமது கைகளில் தான் இருக்கிறது. இத்தகைய மனப்பான்மையை நாம் வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மாவும் அறிவுக்கறிவாய் இருக்கும் கடவுள் விளக்கமும் தவிற மற்றவைகளெல்லாம் தத்துவ ஜடங்களேயல்லது சித்துக்களல்ல என்ற நம் பெருமானின் அருள்வாசகத்தில் உறுதி கொள்ளுங்கள்.

இவ்வண்ணம் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டும் என்கின்ற முயற்சியுடன் இருந்தால் தெரிய வேண்டியதை தெரிந்து கொள்ளலாம்.

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது தருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா
**ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/- தொடர்புக்கு: **8012680865**


*www.vallalarmission.org*

*vallalartrust@gmail.com*

*www.facebook.com/vallalarmission*

*Vallalarmission. Cell no: +91 99427 76351*





# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர் கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: 7070 927 541, 9123 538 685**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly May 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



## வடலூர் மாதப்பூசம்

16.06.2018 – ஆனி 2 – சனி

13.07.2018 – ஆனி 29 – வெள்ளி

10.08.2018 – ஆடி 25 – வெள்ளி

06.09.2018 – ஆவணி 21 – வியாழன்

## திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம்

28.05.2018 – வைகாசி 14 – திங்கள்
இரவு 07:33 – மறுநாள் இரவு 08:38 வரை

27.06.2018 – ஆனி 13 – புதன்
காலை 09:23 – இரவு 11:02 வரை



அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 88385 40176, 63801 11475

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865